# மனமிருந்தால் மார்க்கமுண்டு !

## 10.02.2014

**காவல் ஆய்வாளரின் மாதிரிப் பண்ணை !**

விவசாயம் என்றதுமே.. அதற்கெல்லாம் ஏக்கர் கணக்கில் நிலம், ஆள்பலம், பணம் எல்லாம் இருந்தால்தான் சாத்தியம் என்பதுதான் பலருடைய கருத்தாக இருக்கும். ஆனால், ஏக்கர் கணக்கில் நிலமோ, பணமோ தேவையில்லை. மனதில் ஆர்வமும், அர்ப்பணிப்பும் இருந்தால்.... கையகல நிலத்திலும், கலக்கலாக விவசாயம் செய்ய முடியும் என்பதை ஆங்காங்கே நிரூபித்துக் கொண்டிருப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கை விவசாயிகளில் ஒருவர், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், காவல் ஆய்வாளர் இளங்கோவன்.

மாமல்லபுரத்திலிருந்து புதுச்சேரி செல்லும் கிழக்குக் கடற்கரைச்சாலையில் முப்பதாவது கிலோ மீட்டரில் இருக்கிறது முகையூர். பிரதான சாலையிலிருந்து இடதுபுறம் திரும்பி, கடற்கரை செல்லும் வழியில் சிறிது தூரம் சென்றால், பனை ஓலையால் வேலியமைக்கப்பட்ட இளங்கோவனின் பண்ணை வரவேற்கிறது. எனக்கு பூர்வீகம், கடலூர் மாவட்டம், புதுப்பாளையம். எங்கப்பா வேளாண்மை துறையில் அதிகாரியாக இருந்தவர். வீட்டிலும் விவசாயம் செய்து கொண்டிருந்ததால்... சின்ன வயதிலிருந்தே விவசாயத்தின் மேல் அதிக ஆர்வம். காவல் துறையில் வேலை கிடைத்தாலும், விவசாய ஆர்வம் குறையவில்லை. அந்த ஆர்வத்துக்கு, நண்பர் ராஜாமணியின் தொடர்பால், சமீபத்தில் விடிவு பிறந்திருக்கிறது. முதலில் சின்ன அளவில் செய்து பார்க்கலாம். பிறகு, பெரிய அளவில் இறங்கலாம் என்றுதான் இந்த 25 சென்டில் விவசாயத்தை ஆரம்பித்திருக்கிறோம் என்றார்.

**பலவிதப் பயிர்கள் !**

படிப்பு முடித்ததும், உரக்கடையில் கொஞ்ச நாள் வேலை செய்துகிட்டிருந்தேன். அந்த சமயத்தில்தான், ரசாயன உரங்களால் வரும் தீமைகளையும் தெரிந்துகொண்டேன். அதனால் ஆரம்பத்திலிருந்தே, இயற்கை விவசாயம் பற்றிய தேடல் இருந்தது. ராஜாமணி மூலமாகத்தான் ‘பசுமை விகடன்’ அறிமுகமானது. அதைப் படிக்க ஆரம்பித்த பிறகு, விவசாயத்தின் மேல் ஆர்வம் அதிகமாகிவிட்டது. இனியும் தயங்கிக்கொண்டே இருக்கக் கூடாது என்று சோதனை முயற்சியில் இறங்கியாச்சு. இந்த 25 சென்டில் சவுக்கு, குமிழ், மா, வாழை, காய்கறிகள, தர்பூசணி என்று விதவிதமான செடிகளைப் பார்க்கும் போது சந்தோஷமாக இருக்கு. இது மணற்பாங்கான இடம் என்பதால் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. ஆனால், இந்த மூன்று மாதத்திலேயே செடிகளில் நன்றாக வேர் பிடித்திருக்கிறது. இதுவே பாதி வெற்றிதான். இன்னமும் கொஞ்ச நாட்களிலேயே பசுமைக் கட்டிவிடும் என்ற இளங்கோவன் பண்ணையைப் பராமரித்துவரும் ராஜாமணியை அறிமுகப்படுத்தினார்.

**நான்கு வரிசையில் பயிர்கள்!**

மரப்பயிர்கள், பழப்பயிர்கள், காய்கறிகள் என்று அடுக்கு வரிசையில் போட்டிருக்கிறோம். நடுவில் தர்பூசணி இருக்கிறது. மதுராந்தகம் பக்கத்தில் இருக்கும் பொலம்பாகத்தைச் சேர்ந்த பெரியவர் முத்துமல்லா ரெட்டியாரிடம் இருந்துதான் இந்த தொழில்நுட்பத்தைக் கற்றுக்கிட்டோம். ஒரு சென்டில் ரோஜா, முல்லை, திசுவாழை என்று இருக்கிறது. இங்கேயே ஜீவாமிர்தம், அமுதக் கரைசல் தயாரிக்கிறோம். நாங்க தங்குவதற்கான ஒரு ஷெட்டும் இருக்கிறது. தோட்டத்தை சுற்றி பனை ஓலைகளை வைத்து வேலி அமைத்து …. பக்கத்தில் உயிர் வேலியாக நெய்வேலி காட்டாமணக்கை நட்டுவிட்டோம்.

முதல் வரிசையில் ஓரடி இடைவெளியில் 150 சவுக்கு இருக்கு. அதற்கு இடையில் பாவக்காய், சுரைக்காய், மிளகாய், கத்திரி, தக்காளி இருக்கு. எதிர் பக்கத்தில் 150 சவுக்கும், பத்தடி இடைவெளியில் 15 சந்தன கன்றுகளும் நட்டிருக்கிறோம். சவுக்கு வளர்ந்த பிறகு, நிலத்தை சுற்றி வேலி மாதிரி ஆகிவிடும். இரண்டாவது வரிசையில் மூன்றடி இடைவெளியில் 32 குமிழ் கன்றுகள் இருக்கு. அதற்கு எதிர் பக்கத்தில் பத்து அடி இடைவெளியில் நான்கு செஞ்சந்தனம் இருக்கு. இதற்கான இடைவெளியில் நான்கு தென்னை, வாழை இருக்கு. மூன்றாவது வரிசையில் பத்து அடி இடைவெளியில் நான்கு மரங்கன்றுகளும், 25 அடி இடைவெளியில் 5 தென்னையும், 5 வாழையும் கலந்து நட்டிருக்கிறோம். அதற்கு எதிர் பக்கத்தில் 5 அடி இடைவெளியில் 22 சந்தனமும், ஒட்டுண்ணிச் செடியாக மாதுளையும் நட்டிருக்கிறோம். நான்காவது வரிசையில் 15 அடி இடைவெளியில் பலாவும், அதற்கு இடையில் கொய்யாவும் நட்டிருக்கிறோம். எதிர் பக்கத்தில் 8 அடி இடைவெளியில் 15 ரோஸ்வுட்டும், 15 சந்தனம் என 300 மரக்கன்றுகள் இருக்கு. சுற்றியும் மரப்பயிர்கள் போட்டதற்கு பிறகு, ஒரு அடி இடைவெளியில் 260 குழிகள் எடுத்து தர்பூசணி போட்டிருக்கிறோம் என்றார்.

**பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் எறும்புகள் !**

ஓரடி அழத்திற்கு குழி எடுத்து… வேப்ப மரத்தூள் (மரம் அறுக்கும் ஆலைகளில் கிடைக்கும்), குப்பை உரம் (திடக் கழிவு), எரு இது மூன்றையும் சம அளவில கலந்த கலவையில் ஒரு கைப்பிடி அளவு, ஒவ்வொரு குழியிலும் போட்டு கன்றுகளை நட்டிருக்கிறோம். சரியாக வேர் பிடிக்காத செடிகளைப் பக்கவாட்டில் தோண்டி, வேரோடு எடுத்து வேறொரு இடத்தில் வைத்திடுவோம். ஐந்து நாளைக்கு ஒரு முறை, அமுதக் கரைசலையும், 11 நாட்களுக்கு ஒரு முறை ஜீவாமிர்தத்தையும் கொடுக்கிறோம். அமுதக் கரைசலை செடிகளில் தெளிக்கும்போது, இனிப்புச் சுவைக்கு எறும்புகள் வருகிறது. அந்த எறும்புகள் இலைகளைத் தாக்கும் பூச்சிகளுடைய முட்டைகளை சாப்பிடுகிறது. தவிர, 15 நாளைக்கு ஒரு முறை வேப்பங் கொட்டைக் கரைசலையும் தெளிக்கிறோம்.

**பணம் தேவையில்லை .. மனம் இருந்தால் போதும் !**

சலுகை விலையில்தான் கன்றுகளை வாங்கினோம். தேங்காய் ஓலையிலேயே ஷெட் போட்டுவிடடோம். இப்படி எல்லாம் சேர்த்து கிட்டதட்ட 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் செலவு செய்திட்டோம். 2 மாதத்தில் தர்பூசணி மூலமாகவும், 3 மாதத்தில் பூக்கள் மூலமாகவும் வருமானம் கிடைக்கலாம். வருமானத்தைவிட, மனதில் ஆர்வம் இருந்தால்… சின்ன இடத்தில்கூட விவசாயம் செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாக ஒரு

மாதிரிப் பண்ணையாக ஆக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய முக்கிய நோக்கம். இதன் மூலமாக சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கையை விதைக்க முடியும்.. சுற்றுச்சூழலையும் காப்பாற்ற முடியும் என்றார்.

**தொடர்புக்கு**

வேணு, ராஜாமணி, செல்போன் : 97904 25912

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.02.2014 www.vikatan.com**